பொ.புஸ்பமாலினி ,
சு.வி.அ.க. நிறுவகம்,
கிழக்கு பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு.
17.06.2015.

S.இளஞ்ழெியன்.
வேலணை மத்தியகல்லூரி,
பழைய மாணவர்கள் சங்கம்,
கனடா.

## நிதி உதவிக்கான நன்றி கூறல்

கனம்

மேற்படி வேலணை மத்திய கல்லூரியில் கல்வி பயின்று, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இசைத்துறையில் 4ம் வருடத்தில் கல்வியைத் தொடர்ந்து வரும் பொன்னம்பலம் புஸ்பமாலினி ஆகிய நான் சென்ற நான்காம் மாதம் எமது பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி பெங்கலூரில் நடைப்பெற்ற கூடைப்பந்தாட்போட்டியில் கலந்து கொண்டது. தங்களுக்கு தெரிந்ததே.

இதற்காக எமது பல்கலைக்கழக அணி இந்தியா செல்வதற்கு ஆயத்தமாகும் போது என்னால் பயண நிதியை ஈடுசெய்ய முடியவில்லை. இதன் காரணமாக எனக்கு பல வழிகளில் உதவி புரிந்து வரும் கனடா பழைய மாணவர் சங்கத்தினரிடம் நான் இந்தியா செல்வதற்காக நிதி உதவி பெற முடியுமா? என S.இளஞ்செழியன் அவர்களிடம் தொலை பேசியில் தாழ்மையுடன் கேட்டிருந்தேன். அதற்கு அவர், இது சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டு முடிவினை சொல்வதாக கூறியிருந்தார். அது போல் கலந்துரையாடல் வெகு விரைவாக மேற்கொண்டு என்னிலை அறிந்து எனது நிதி உதவியின் ஒரு பகுதியான ரூபா 25000.00 பணத்திற்கு தாங்கள் பொருப்பேற்பதாக கூறி, எனது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தனர். இதனைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இதற்காக எனது தேவையை கருத்தில் கெண்டு குறிப்பிட்ட காலத்தில் உடனடியாக எனக்கு பணம் கிடைப்பதற்கு பல வழிகளில் முன்னின்று உதவி புரிந்த இளஞ்செழியன் அவர்கட்கும், சு. சிவகுமார் அவர்கட்கும், நான் நன்றி கூற கடமைப்பட்டடுள்ளேன். அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், வேலணை மத்திய கல்லூரிக்கும் நான் மிகவும் நன்றி கூறிக்கொள்கிறேன். அத்துடன் நின்று விடாது நான் எதிர்காலத்தில் எனது பாடசாலைக்கும் எனது சமூகத்திற்கும் என்னாலான உதவியினைப் புரிவேன் என்று கூறி மேலும் மேலும் எனது கல்வி செலவிற்காக ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையை வழங்கி வரும் கனடா பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் வயதில் சிறியவளாகிய, என்னுடைய நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு இவ்வாறாக தங்களது சேவைகள் மென்மேலும் தொடர வேண்டும் என்றும் என்னைப் போன்ற மாணவர்கட்கு தங்களது உதவிகள் தடையின்றி கிடைக்க வேண்டும் என்றும், அதற்காக கனடா பழைய மாணவர் சங்கம் ஒரு ஆல விருட்சமாக வளர வேண்டும். என்றும் எல்லாம் வல்ல இறைவன் ஆசிகளை வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

நன்றி.

இங்ஙனம்
P. Pushpamaly.
சு.வி.அ.க. நிறுவகம்,
கிழக்கு பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு.
17.06.2015.